# சுதந்திரன்

SUTANTIRAN





வள்ளுவர் ஆண்டு 2009
மாசி 7
ரபி. அவ். 10
ஞாயிறு (19-2-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 73
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


## 'சிறீலங்கா'வின் தேசியக் கொடிக்கு மரியாதை செய்ய

# தமிழீழ விடுதலை வீரர்கள் மறுப்பு

### வெளிநாட்டு பிரதிநிதிகள் திகைப்பு!
### சிங்கள ஆட்சியாளர்கள் மலைப்பு!

லண்டன் தூதரகத்தில் பெப்ரவரி 4ம் திகதி இடம் பெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது அங்கு ஆர்ப்பாட்டம் நடத்திய ஈழவிடுதலை வீரர்கள் சிறீலங்காவின் தேசியக்கொடி ஏற்றப்பட்டபோதும், தேசிய கீதம் இசைக்கப்பட்டபோதும் அவற்றுக்கு மரியாதை செய்ய மறுத்தது மூலம் வெளிநாட்டாரின் கவனத்தை தம்பால் ஈர்த்தனர், தமிழ்ஈழவிடுதலை வீரர்கள் ஆர்ப்பாட்ட சுலோக அட்டைகளுடன் காணப்பட்டதால், சுதந்திர தின நிகழ்ச்சிகளை திரைப்படமாக்கமுடியாது தூதரக அதிகாரிகள் திண்டாடினர். லண்டனில்இடம்பெற்றுவரும் இத்தகைய ஆர்ப்பாட்டங்களாலும் பிரசாரங்களாலும் இலங்கை அரசு கிலியடைந்துள்ளதாக தெரியவருகிறது.

'சிறீலங்கா'வின் சுதந்திர தினத்தையொட்டி 4-2-78ல் லண்டன் தூதரகத்தில் நடைபெற்ற தேசியக்கொடியேற்றுவைபவம், இலங்கையில் ஜனாதிபதி பதவியேற்பது சம்பந்தமான கொண்டாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளைப்பகிஷ்கரித்தும், எதிர்த்தும் லண்டன் ஈழவிடுதலை இயக்கமும், தமிழர்நடவடிக்கைக்குழுவும் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் காலை 8 மணிமுதல் மாலை 2மணிவரை கொட்டும்மழையையும், கடும்பனி, குளிர் ஆகியவற்றையும் பொருட்படுத்தாமல் சுலோக அட்டைகளுடன் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்:

எதிர்ப்பு சுலோக அட்டைகளுடன் ஈழவிடுதலைவீரர்கள் நிறைந்து காணப்பட்டதால். அவர்களைத் தவிர்த்து, மேற்படி கொண்டாட்ட நிகழ்ச்சிகளை திரைப்படமாக்குவதற்கு தூதரகத்தின் திரைப்படப் பிரிவினர் படாதபாடுபடவேண்டியிருந்தது.

சிறீலங்காவின் தேசிய கீதம் பாடப்பெற்ற பொழுதும், தேசியக்கொடியேற்றப்பட்டபொழுதும், அனைவரும் எழுந்துநின்று அதற்குமரியாதை தெரிவித்தநேரத்தில், ஈழவிடுதலை வீரர்களோ அவற்றுக்கு மரியாதை தெரிவிக்க மறுத்து தரையில் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இச்சம்பவம் அங்குவந்திருந்த வெளிநாட்டுப் பிரமுகர்களை சிந்திக்க வைத்தது. இதனல் அவர்கள் ஆர்ப்பாட்டம்செய்த விடுதலை வீரர்களுடன் பேச்சுக் கொடுத்தனர். ஏன் இப்படி உங்கள் நாட்டு தேசியக் கொடியையும், தேசியகீதத்தையும் அவமதிக்கிறீர்கள் என்று கேட்டனர்; உங்களுக்கு என்ன குறை என்றும் கேட்டனர்.

இந்த சந்தர்ப்பத்தையே எதிர்நோக்கியிருந்த விடுதலை வீரர்கள் ஈழத்தமிழினத்தின் நிலையை வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறி பிரசாரம்செய்தனர்.

''4-2-48ல் உண்மையில் எமக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை; எஜமான மாற்றமே நிகழ்ந்தது. வெள்ளையனின் அடிமையாக இருந்த நாம் சிங்களவனின் அடிமையாக மாற்றப்பட்டோம். இப்போது 4-2-78ல் ஓர் சிங்கள சர்வாதிகாரிக்கு அடிமையாக்கப்படுகிறேம். 1944ல் சட்டசபையிலேயே சிங்களம்மாத்திரம் ஆட்சிமொழியாக, தேசிய மொழியாக விளங்கவேண்டுமென்று பிரேரணையை கொண்டுவந்தவர்இதே ஜே. ஆர். 1955ல் களனிமாநாட்டில் சிங்களம் மட்டும் பிரேரணையை நிறைவேற்றியது ஜே. ஆரின் கட்சி; 1958ல் பண்டா—செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக பாத யாத்திரை நடத்தி தமிழ்மக்களுக்கு சுயாட்சி கிடைக்கவிடாமல் செய்தவர் இதே ஜே. ஆர்; 1972ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு இன்னும் கூடுதல் இடம் தரவேண்டுமென்று பிரேரணை கொண்டுவந்தவரும் இவரே; 1975ல் யாழ்நகரில் பகிரங்கமேடை


—8-ம் பக்கம் பார்க்க


### சுதந்திரன் இந்த இதழிலிருந்து...!

சன்சோனி ஆணைக் குழுவின் விசாரணையில் அளிக்கப்படும் சாட்சியங்களின் முக்கியபகுதிகள் இந்தஇதழிலிருந்துசுதந்திரனில்விபரமாக வெளியிடப்படுகிறது. உங்கள் பிரதியை விற்பனையாளர்மூலம் உறுதிசெய்து கொள்ளுங்கள்.

# "புத்தூரில் பொலீஸ் சுடப்பட்டதற்கு

# தமிழர் சரியாக விலைதரப்போகிறார்கள்!"

### ஆகஸ்ட் 15ம் திகதியே செனிவிரத்தின இவ்வாறு கூறியதாக சாட்சியம்

கோப்பாய் சம்பவத்துக்காக— அதாவது ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் சுடப்பட்டு கையில் காயமடைந்ததற்காக — தமிழர்கள் சரியாக விலை தரப்போகிறார்கள் Tamils are going to pay very dearly for the act)என்று யாழ் பொலிஸ் சுப்ரீன்டெண்ட் திரு. ஏ. எஸ். செனிவிரத்தின 1977 ஆகஸ்ட் 15ம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் தம்மிடம் கூறியிருந்ததாக சன்சோனி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த டைம்ஸ் குறூப் பத்திரிகை நிருபர் அன்ரனி அகஸ்தின் சவரிமுத்து தெரிவித்துள்ளார்.

டைம்ஸ் குறூப் பத்திரிகைகளின் யாழ்ப்பாணப்பகுதி நிருபராகவும்சுபாஷ் டூரிஸ்ட் ஹோட்டலின் செயலாளராகவும் இருக்கும் லூதர்ஸ் அன்ரனி அகஸ்தின் சவரிமுத்து சன்சோனி ஆணைக்குழு முன் 10-2-78ல் சாட்சியமளித்தார்.

அவர் தமதுசாட்சியத்தில் ஆகஸ்ட் 15ம்திகதி பிற்பகல் 3.30 மணிக்கு தாம் யாழ் பொலிஸ் சுப்ரீன்டெண்ட் திரு. ஏ. எஸ். செனிவிரத்தினவை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்ததாகத் தெரிவித்தார். அப்போது திரு. சவரிமுத்து கூறியதாவது!—

"நான் அவரைச் சந்தித்த போது, கார்னிவல் சம்பவம் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர், தாம் பொலிசாரிடம் சீருடையுடன் அங்கு செல்ல வேண்டாம் என்று திட்டவட்டமாக உத்தரவு பிறப்பித்திருந்ததாகவும், சில பொலிசார் சாதாரண உடையில் அங்குசென்று சில குழப்பங்களை ஏற்படுத்தி மோதலில் இறங்கி, அதனல் காயப்பட்டதாக தாம் கேள்விப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அடுத்து முனியப்பர் கோவில் சம்பவத்தைக் குறிப்பிட்டு அங்கு இ. போ. ச. ஊழியர் ஒருவர் பொலிசாரால் தாக்கப்பட்டதுபற்றிக் கேட்டேன். அதற்கு அவர் இப்படி ஒரு குற்றச்சாட்டு இருப்பதாகவும், ஆனல் இச்சம்பவத்துடன் தொடர்பான பொலிசாரை அடையாளம் காட்டுவதற்கு யாரும்கிடைக்கவில்லையென்றார்.

"ஒரு பொலிஸ்காரர் சுடுபட்டு, கையில்காயமடைந்த கோப்பாய் சம்பவத்தையே திரு. செனிவிரத்தின அழுத்திக் கூறினர். இந்த நடவடிக்கைக்காக தமிழர்கள் நிறைய விலைகொடுக்கப்போகிறார்கள்என்று உடனடியாக அவர் என்னிடம் தெரிவித்தார். அச்சமயத்தில் அவரது இக்கூற்றின் உள்நோக்கம் என்ன என்பது குறித்து நான் ஆலோசிக்கவில்லை: எனினும் நாட்டில் குழப்பங்கள் ஏற்படப் போகிறது என்று எண்ணிக் கொண்டேன். மேலதிகமான தகவல்களை பொலிஸ் சுப்ரீன்டெண்டிடமிருந்து நான் எதிர்பார்க்க முடியவில்லை".

—இவ்வாறு திரு. சவரிமுத்து தனது சாட்சியத்தின் போது குறிப்பிட்டார்,


சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
-இது ஓர் லாலா தயாரிப்பு-
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# இலக்கிய உலகில் ஒரு கண்ணோட்டம்

தமிழ் ஈழத்தின் தரமான கலை இலக்கிய ஏடான சுடர், இதழின் மார்கழி — தை இதழில் வெளிவந்திருக்கும் ஆசிரியத் தலையங்கம், பாதை தவற முயற்சிக்கும் இயக்கத்து நம்மவர்களுக்கு சரியான இடித்துரையாக அமைந்துள்ளது. விடுதலையை மறந்து வேலைக்கும் மற்றும் சலுகைகளுக்கும் பின்னல் ஓடுகின்றவர்களுக்கு — ஓட நினைப்பவர்களுக்கு அது சரியான சவுக்கடியாக அமைந்துள்ளது. அத் தலையங்கம் வருமாறு:—

தமிழ் ஈழ மக்களின் விடுதலை இயக்கம்— இடையில் ஏதோ ஒரு மயக்கம் கண்டு தடுமாறுவது போல் தோன்றுகிறது.

தொகுதிகளின் முன்னேற்றம் — இளைஞர்களின் உத்தியோகம் என்ற தொனியில் சிலர் இப்போது பேசத்தொடங்கி இருக்கிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரில் சிலர் கூட—வேலை தேடும் இளைஞர் கூட்டம் தம்மைச் சுற்றி நிற்பதாக ஏதோ ஒரு தயக்கத்தோடு பேசுவது — தமிழர் விடுதலை இயக்கத்தில் ஏற்பட்டுள்ள தளர்வையே காட்டுகிறது.

போராட வேண்டியவர்கள் எல்லாம் எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கிறார்கள்.

தமிழர் நிலத்தைக்காப்பாற்றுவதில் அரசின் தயவு வேண்டும்—அதனால் நாம் அரசாங்கத்தை ஓரளவு தழுவிச் செல்ல வேண்டும் — என்றெல்லாம் தத்துவங்கள் பேசப்படுகின்றன.

புதிய மயக்கத்தில் வீழ்ந்திருக்கும் புதிய பிறவிகளுக்கு நாங்கள் பழைய இயக்கத்தின் பழைய கதையை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

தொழில்—நிலப்பாதுகாப்பு - தொகுதி முன்னேற்றம் என்ற எந்தக்காரணத்துக்காகவும் தமிழர் விடுதலை இயக்கம் இதுவரை சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு தோள்கொடுத்துஇயங்கியதில்லை.

தமிழரில் உதிரிகள் சிலரே கடந்த 30 ஆண்டு கால வரலாற்றில் சிங்கள ஏகாதிபத்தியத்தைத் தழுவினார்கள் — அவர்கள் அப்படித் தழுவியும் தமிழர் உரிமைகள் பறிபோவதைத் தடுக்க முடியாதவர்களாகவே அரசியல் அரங்கை விட்டு நழுவினார்கள்.

மந்திரிகளாக நம்மவர்கள் மாறிய காலத்தில் கூட நாம் என்ன மகாராசாக்களாகவா நடத்தப் பட்டோம்?

பொன்னம்பலம் அமைச்சரான காலத்தில் தமிழர் குடியுரிமை பறிபோகவில்லையா? நல்லையா மந்திரி ஆன காலத்தில் சிங்களவர் குடியேற்றம் நடைபெறவில்லையா? குமாரசூரியர் அமைச்சரான காலத்தில் தரப்படுத்தல் கொண்டுவரப்படவில்லையா?

மக்களால் தெரிவு செய்யப்படாத திருச்செல்வத்தை தமிழரசுக்கட்சி மாவட்ட சபை நிறுவும் நோக்கோடு ந்திரி ஆக்கிப்பார்த்ததே- மண் கவ்வியதைத் தவிர முடிவில் நாம் என்ன மரியாதை கண்டோம்?

பழைய அனுபவங்களை மறந்த எந்த விடுதலை இயக்கமும் வரலாற்றில் புதிய அத்தியாயங்களை உருவாக்கியதில்லை.

நாம் விழிப்போடு இருக்கவேண்டும் என்றே நாம் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்,

இனிய சுதந்திரம் கிடைக்கின்றவரை பெரிய சுகங்கள் கிடைக்கும் என்று எளிய அடிமைகள் எதிர்பார்க்கக் கூடாது.

தொழிலும்—தொகுதியின் எழிலும் அல்ல— முதலில நமக்குத் தேவைப்படுவது விடுதலை நிழலும்—வெற்றிக் கழலும் என்பதை களத்தில் நிற்கும் தொண்டர்களோ—தலைவர்களோ மறப்பது ஒரு விடுதலை இயக்கத்தின் வேரை அறுத்து விடும்—விருட்சத்தை வீழ்த்திவிடும்,

தந்தை செல்வா முப்பது ஆண்டுகளாக வளர்த்த விடுதலைத் தழலை அணைய விடாதீர்கள்.

இயக்கத்தைப் பிடித்துள்ள மயக்கத்தை எடுத்தெறிவதில் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் தயக்கத்தைக் கைவிட வேண்டும்.

புனிதமான இலட்சியத்தைக் கண்ணெனப் போற்றுங்கள்!

ஆடுகின்ற கால்கள் உங்களுக்கு இருக்கக் கூடாது — இயக்கம் முழுவதுமே ஆடி விழுந்து விடும்.

நிமிர்ந்து நில்லுங்கள்!

ஒரு பெரிய சமுதாயம் உங்களை நம்பி இருக்கிறது என்பதை நீங்கள் மறப்பது ஒரு பெரிய பாவமாகும்!




வ. பூபாலசிங்கம்,
நெடுங்கேணி,

கே: இன்றைய சனாதிபதி சாதி மத இனவேறுபாடற்ற சமதர்ம கொள்கையை கடைப்பிடிப்பேன் என்று கூறுகிறார். அப்படியானால் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களம்படிக்க வேண்டுமென்ற கட்டாய மெதுவுமின்றியே சம்பள உயர்வு, பதவிஉயர்வு போன்றவை உடனடியாகக் கிடைக்குமா?

ப: ஒருவரது சொல்லும் செயலும் ஒரேமாதிரித்தான் அமைய வேண்டுமென்று சட்டதிட்டமெதுவும் இதுவரை வகுக்கப்படவில்லை. இடி அமீன் கூட தான் சமதர்மக்கொள்கையை கடைப்பிடிப்பதாகத்தான் கூறிக்கொண்டிருக்கிறார்!

கே: மும்மொழித் திட்டத்தை முறியடிப்பதற்கு வழியென்ன?

ப: சிங்களப்போதனையை தமிழ் மாணவ சமுதாயம் முற்றாகப் பகிஷ்கரிப்பதுதான்!

ஃ

சி. சிவரஞ்சித்,
கடற்கரை வீதி
யாழ் நகர்.

கே: எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு உபஜனாதிபதி பதவிகிடைத்தால் என்ன செய்வார்?

ப: பதவிகளால் தமிழர்களின் சுதந்திரதாகத்தை கிள்ளியெறிந்துவிட முடியாதென்பதை சிங்களவர்களுக்கும், அகில உலகத்துக்கும் எடுத்துக்காட்டுவார்.

கே: இனப்பிரச்சினையே முதலில் தீரவேண்டும் என்று ஏன் கூறுகிறீர்கள்?

ப: இனத்துக்கு விடுதலை கிடைத்துவிட்டால், ஏனைய பிரச்சினைகள் அனைத்தையும் மற்றவர்களின் கையை எதிர்பார்க்காது நாமே தீர்த்துவிடமுடியும்!

ஃ

ராதிகா,
மட்டக்களப்பு

கே: தாம் கவிதையில் எழுதுவதற்கு செயல்வடிவம் தரும் செயல்வீரர் யார்?

ப: அவர்உங்களூரிலேயே இருக்கிறார். தெரிந்து கொண்டே என் வாயிலிருந்தே அதை வரவழைக்க விரும்புகிறீர்கள் போலும்! தன் கவிதைகளை செயற்படுத்தும் கர்ம வீரர் கவிஞர் காசிஆனந்தன் தான்!

ஃ

எஸ். வசந்தமலர்,
5ம் யூனிற்
யோகபுரம்

கே: எங்கள் தானைத்தளபதியைப்பற்றி சில குறிப்புக்கள் கூறுவீர்களா?

ப: நிலவுக்கும் ஒரு நாள் ஓய்வு உண்டு; ஆனால் தலைவர் இருக்கும்வரை இல்லை! ஓய்வின்றி இனத்துக்காக உழைத்துவரும் அந்த உத்தமர் தன் உடல் நலத்தையும் கொஞ்சம் கவனிக்கவேண்டும்—அவருக்காக இல்லாவிட்டாலும், இனத்துக்காகவும்; இயக்கத்துக்காகவும்!

கே: எங்கள் இதயத்தில் குடியிருக்கும் தமிழ் தந்தைக்கு நாங்கள் செய்ய வேண்டியதென்ன?

ப: அவர் காட்டிய வழி தவறாது, சலுகைகளில் மயங்காது, சுதந்திர ஈழத்தை நோக்கி வெற்றி நடைபோடுவதுதான்!

ஃ

ஆனந்தராஜ்,
உடுப்பிட்டி வடக்கு.

கே: தமிழ் தலைவர்கள் காலமறிந்துதான் போராட்டம் என்று கூறுவதேன்?

ப: அவர்கள் திருக்குறள் படித்திருப்பதுதான் காரணம்!

கே: 'தார்மீகம்' என்றால் என்ன?

ப: ஐ. தே. க. அன்கொம்பனியின் 'டிறேட்மார்க்'!

ஃ

சு. பாஸ்கரன்,
வேலணை கிழக்கு.

கே: சிங்கள மாணவர்கள் தமிழ்கற்க முன்வந்தால் நாம் ஏன் அவர்களின் மொழியாகிய சிங்களத்தை கற்கக்கூடாது?

ப: அவர்களது மொழி ஆட்சிமொழியாகவும் நமது மொழி அடிமைப்படுத்தப்பட்டமொழியாகவும் இருப்பதுதான் காரணம்! சிங்களவர்கள்போல நாமும் ஆளும் இனத்தவர்களானபின்னர், எந்த மொழியையும் நாம் விரும்பினால் படிக்கலாம். சிங்களவர்கள் தமிழைப்படித்தால் அது தமிழ்மீது கொண்ட பற்றுதலால் அல்ல-அடிமைகளை அடக்கியாள அடிமைகளின் மொழியை படிக்கிறார்கள்; அவ்வளவுதான்!

ஃ

பா. சிவபாலசேகரன்,
மணியகாரன் வீதி,
தெல்லிப்பளை.

கே: மன்னார்சூசைதாசன் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: மன்னாரிலிருந்து தமிழர் விடுதலை இயக்கத்துக்கு கிடைத்த நன்முத்து. இனத்தின் விடுதலைக்கு உழைப்பதற்காகவே சாம்பியாவில் தாம் வகித்த பெரும்பதவியை உதறியெறிந்துவிட்டு இங்குவந்தவர். துணிச்சலில் டாக்டர் நாகநாதனின் வாரிசு. இனிமைத் தமிழில் அவர்பேசுவதும், பொருத்தமாகப் பாடுவதும் கூட்டணி மேடைகளில் களைகட்டுகிறது. பேசுவதிலும், பாடுவதிலும் மட்டுமல்ல செயலிலும் அவர் வீரர்தான் என்பதை வருங்காலம் உணர்த்தும்!

ஃ

சி. சிறீஜீவா,
கொக்குவில்

கே: தமிழ் மக்கள்முன் கடவுள் தோன்றினால் அவர்கள் கடவுளை என்ன கேட்பார்கள்?

ப: கடவுளே உன் கையிலிருக்கும் சூலாயுதத்தையும் வேலாயுதத்தையும் கொஞ்சக்காலத்துக்கு எமக்கு இரவல்தா என்று கேட்பார்கள்!

ஃ

எஸ். வசந்தகுமாரன்,
யூனியன்கல்லூரி,
தெல்லிப்பளை.

கே: தேசிய இனத்திற்கே சுயநிர்ணய உரிமை உண்டு. இலங்கைத் தமிழர் ஒரு தேசியஇனம். ஆனால் முஸ்லீம்களும், இந்தியத் தமிழர்களும் தேசிய இனம் அல்ல. இந்நிலையில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஏகோபித்து, சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படி கேட்பது நியாயமானதா?

ப: தமிழர்களை இலங்கைத் தமிழர், இந்தியத்தமிழர்என்றுபிரித்துப்பேசுவதே தவறு. ஒரே மொழியையும் கலாசாரத்தையும், பண்பாட்டையும் கொண்ட ஒரே இனத்தினரான மலையக (இந்திய) தமிழர்களை தமிழ் ஈழத்தில் குடியேற்றுவதன் மூலம், தமிழினம் ஒரே தேசிய இனமாக முடியும். தமிழைத் தாய்மொழியாகச் கொண்ட முஸ்லிம்களுக்கு தமிழ் ஈழத்தில் சுயநிர்ணய உரிமை வழங்குவதற்கு இணங்கியுள்ளோம். நமது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை தமிழ்பேசும்மக்களுக்காக அல்ல—தமிழ் தேசிய இனத்துக்காகவே!

ஃ

க. மதனதேவா,
திருக்கோணமலை:

கே: கொழும்பு மேற்கு தொகுதியில் நடக்கவிருக்கும் தேர்தலைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: ஆனை அடி சறுக்குவதற்கு இடமிருக்கிறது!

கே: நீங்கள் குறிப்பிட்டதுபோல் இந்த நாய்த்தமிழர்களைத் திருத்துவதற்கான ஒரேவழி என்ன?

ப: எலும்புத்துண்டை வீசுபவர்களே தங்கள்தேவை முடிந்தபின் காலால் அடிக்கும்போதுதான் திருந்துவார்கள்!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் சூயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழர்களின் குடியுரிமை, மொழியுரிமை பறிக்கப்பட்டன!

## ஆகஸ்ட் கலவரம் அசல் இனக்கலவரமே! தமிழர்கள் மட்டுமே தாக்குதலுக்குள்ளாயினர்!"

### சன்சோனி ஆணைக்குழு முன்னர் கே. என். சொக்ஸி ஆரம்ப உரை!

1977 ஆகஸ்ட்—செப்டம்பரில் நாடெங்கும் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி ஆராய்வதற்கென அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருக்கும் இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. எம். சி. சன்சோனி அவர்களை ஆணையாளராகக் கொண்ட தனிநபர் ஆணைக்குழு தனது விசாரணையை 8-2-78ல் யாழ்ப்பாணத்தில் நூல்நிலைய மண்டபத்தில் ஆரம்பித்தது.

இந்த விசாரணையின் போது, தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகத்தின் சார்பில், சட்டத்தரணி திரு. எஸ். ரவீந்திரனின் அனுசரணையுடன் சட்டத்தரணிகளான திருவாளர்கள்எஸ்.நட்ராசா. எஸ் விசுவநாதன், கே. சண்முகலிங்கம், சிவாராஜரட்ணம், லெஸ்லிபார்ட்லெட், கே. தேவராஜா, மணிவாசகம் அண்டர்வூட், எஸ். புதுமை நாயகம், எஸ். சக்கரதரன், எஸ். ஸி. சந்திரகாசன், எஸ். சோமசுந்தரம், ஐ. கேதீஸ்வரன், எஸ். சிற்றம்பலம், மனோதேவசகாயம், எஸ். மகேந்திரன், சிவாராஜசிங்கம், திருமதி சாந்தினி ஞானகரன், எஸ். மண்டலேஸ்வரன், என். பி. நைல்ஸ், மகேந்திரன் செல்லத்தம்பு, ராஜன் செல்லத்தம்பு, எஸ். கருணாகரன் ஆகியோர் சகிதம் சாம் ஜே. ஸி கதிர்காமர் கியூ. சி. ஆஜரானார்.

தமிழ் தொழிற்சங்கக்கூட்டணி சார்பிலும், பாதிக்கப்பட்ட தமிழ் உத்தியோகத்தர் சங்கத்தின் சார்பிலும் திரு. எஸ். ரவீந்திரனின் அனுசரணையுடன், திருவாளர்கள் கே. சண்முகலிங்கம், லெஸ்லிபார்ட்லெட்,மணிவாசகம அண்டர்வூட், செல்வி பாஸ்கரிமுதலியார், செல்வி பாதிமா ஆரோக்கியசாமி, எம். கருணாகரன் ஆகியோர் சகிதம் திரு. பி. நவரத்தினராஜா கியூ. சி. ஆஜரானார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில், சட்டத்தரணி சோமாஸ் கதிர்காமரின் அனுசரணையுடன், சட்டத்தரணிகள் திரு. எஸ். உருத்திரமூர்த்தி, ஜெயா பெரிசுந்தரம், ஆகியோர் சகிதம் திரு. கே. என். சொக்சி ஆஜரானார்.

விசாரணை ஆரம்பமான போது இ. தொ. கா. சார்பில் மகஜர் ஒன்றை ஆணைக்குழுமுன் சமர்ப்பித்து திரு. கே. என். சொக்சி அங்கு தனது கருத்துக்களை முதலில் முன் வைத்தார். அவர் அங்கு கூறியதாவது!—

"ஆகஸ்ட் வன்முறைச் சம்பவங்களுக்கான அடிப்படைக்காரணங்களை ஆணைக்குழு கண்டுபிடிப்பதற்காக பல உண்மைகளை இ. தொ. கா. சார்பில் இங்கு முன் வைக்கவிரும்புகிறேன். இது சம்பந்தமாக இ. தொ. கா. தலைவரும் தேசிய பேரவை கூறுப்பினருமான திரு. எஸ். தொண்டமான் பல விசாரணைகளை நடத்தி தகவல்களை சேகரித்திருக்கிறார். அவை சம்பந்தமான தேவையான சாட்சியங்கள், கொழும்பிலும், கண்டியிலும் ஆணைக்குழு கூடும்போது அங்கு சமர்ப்பிக்கப்படும்.

1939ல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைஇந்தியகாங்கிரசின் வாரிசாகவேஇலங்கைதொழிலாளர் காங்கிரஸ் இன்று விளங்குகிறது. இந்தியதமிழ் சமுதாயத்தின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக அது விளங்குகிறது. பெரும்பாலும் தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள இந்தியத் தமிழ் சமூகத்தினர் ஏறத்தாழ 10 இலட்சம்பேர் இந்நாட்டில் வாழ்கிறார்கள்; இலங்கையின் மத்தியமாகாணத்திலும், ஊவா, சப்ரகமுவா மாகாணங்களிலுமே இவர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இந்த மக்களுக்கு திட்டவட்டமாக குடியுரிமைகள் கிடையாது. இவர்கள் தமிழைத் தங்கள் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் இவர்களுக்கு தொடர்பு கிடையாது.

இந்நாட்டின் வரலாற்றிலேயே இந்திய தமிழ் சமுதாயம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது இந்தத்தடவை தான். 1958ல் நடைபெற்ற இனக்கலவரத்தில் மலையகத்திலுள்ள நகரப்பகுதிகள் மட்டுமே பாதிக்கப்பட்டது. இம்முறை கலவரத்தில் மலைநாட்டில் வாழும் தமிழ் தொழிலாளர்களே மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

உங்கள் முன்னால் தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகமும் ஒரு மகஜரை சமர்ப்பித்திருக்கிறது. அந்த மகஜரில் 1977ஆகஸ்ட் — செப்டம்பர் கலவரங்களுக்கான அடிப்படை என்ன என்பதுபற்றி தங்கள் கருத்துக்களை அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். வகுப்புவாதமே இந்தக்கலவரத்துக்கு அடிப்படையென்றும்; நடைபெற்றது இனக்கலவரமே என்றும் அவர்கள் தங்கள் மகஜரில் குறிப்பிட்டுள்ளதை நான் படித்துப்பார்த்தேன். இதே கருத்தையே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் தனது மகஜரில் வலியுறுத்தியிருக்கிறது. இது இனக்கலவரம்தான் என்று ஏன் கருதப்படவேண்டுமென்பதற்கு தகுந்த காரணங்களை இ. தொ. கா. தனது மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

மகஜரில் வலியுறுத்தியிருக்கிறது. இது இனக் கலவரம் தான் என்று ஏன் கருதப்படவேண்டுமென்பதற்கு தகுந்த காரணங்களை இ. தொ. கா. தனது மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

"1977 பொதுத் தேர்தல் முடிவடைந்த ஒரு சில நாட்களுக்குள் நாட்டின் சில பகுதிகளில் கலவரங்கள் ஏற்பட்டன. இந்தக்கலவரங்களுக்கு வகுப்பு வாதம் அடிப்படையாக இருக்கவில்லை. ஒரு சமுதாயம் தனிமைப் படுத்தப்பட்டு தாக்கப்படவில்லை; அல்லது மத அடிப்படையிலும் இது நடைபெறவில்லை. தாக்கப்பட்டவர்களும், தாக்கியவர்களும் அரசியல் காரணங்களுக்காகவே தாக்கிக் கொண்டாரர்கள்.

ஆனால், ஆகஸ்ட் பின்னடியிலும் செப்டம்பரிலும் நடந்த சம்பவங்கள் புதிய வடிவம் எடுத்தன. இந்தக் கலவரத்தின் பொதுப்படையான நோக்கம், ஒரு சமுதாயத்தை மட்டுமே தாக்குவதாக இருந்தது, ஒரு சமுதாயம் மட்டுமே குறிவைத்துத் தாக்கப்பட்டது. நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் இந்தக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலைப் பார்க்கும் போது, அவர்கள் அனைவரும் தனியே தமிழராக மட்டுமே காணப்படுகின்றனர்.

அது மட்டுமல்ல — தமிழர்களல்லாத இந்தியர்கள் எவரும் பாதிக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. தோட்டப் பகுதிகளில் தாக்குதலின் உச்சக்கட்டம், இந்திய தமிழ் தொழிலாளிகளையே பாதித்தது. தமிழர்களல்லாத தொழிலாளர்கள் அங்கு பாதுகாக்கப்பட்டனர் அவர்களுக்கு எதுவித துன்பமும் நேரவில்லை!


மலையகத்தில் தமிழ்மக்கள் சிறுபான்மையினராக வாழ்ந்த பகுதிகளிலேயே அவர்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள் தமிழர்கள் அதிகமாக வாழும் தோட்டப்பகுதிகளில் மோசமாக அவர்கள் பாதிப்புக்குள்ளாகவில்லை. நகரப்புறங்களில் தமிழர்களுக்கு சொந்தமான கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. பல தமிழர் தாபனங்கள் எரியூட்டப்பட்டன. தமிழர்கள் அவர்களது வீடுகளிலும், கடைகளிலும் மாத்திரமல்ல—ஏனையஇடங்களிலும் தாக்கப்பட்டுள்ளனர். பெண்கள், இளைஞர்கள் சிறுவர்கள் கூட கொள்ளையிலும், தாக்குதலிலும் ஈடுபட்டிருந்தார்கள். இவைபற்றி ஆணைக்குழு ஆராய வேண்டும்.

ஆகஸ்ட் 16ம்திகதி இரவு அனுராதபுர ரயில் நிலையத்தில்வைத்து யாழ்-கொழும்பு புகையிரதம், மன்னார்—கொழும்பு புகையிரதம் ஆகியன தாக்கப்பட்டன. இது ஒரு பெரிய சம்பவம். பஸ்களிலும் ரயில்களிலும் ஏறிய குழுவினர், தமிழர்களை தனியே பிரித்தெடுத்து, அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். இது பல நாட்கள் நடைபெற்றது.

ஊரடங்குசட்டத்தை அரசாங்கம் பிரகடனப்படுத்திய பின்னரும், ஊரடங்கு வேளையிலேயே நடைபெற்ற நாச சம்பவங்களுக்கு எம்மிடம் ஆதாரம் இருக்கிறது. இது எவ்வாறு நடைபெற்றது என்பது ஆராயப்பட வேண்டும்.

அனுராதபுரத்தில் புகைவண்டிகளில் வந்த தமிழர்கள் தாக்கப்பட்ட அதே வேளையில் நாட்டின் பல இடங்களில் பல இந்து ஆல

—6:ம் பக்கம் பார்க்க




ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் சட்டத்தரணியானமையையொட்டி புங்குடுதீவில் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவுக்குத் தலைமைதாங்கிய தமிழ்ஈழ முதல்வர் திரு. அமிர்தலிங்கம் திரு. மகேந்திரனுக்கு மாலை அணிவித்து ஆசீர்வதிப்பதையும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவதானித்த வண்ணம் இருப்பதையும் திரு. எஸ். கே. மகேந்திரன் பதிலுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

## உன்னை நீ தரக்கூடாதா?

### திருக்கோணமலைக்கவிராயர்

சுதந்திரத் தாகம் எங்கும் நிரந்தரம் ஆகவேண்டும்
அருந்தமிழ் தொண்டுசெய்ய அனைவரும் முனைய வேண்டும்
பெருந்திறச் செய்கை வேண்டும் பேரணி சாடவேண்டும்
விருந்து நாள் வெற்றிநாளாம், வேறுநாட் துக்கநாளாம்.

பேரவை அதிரும் வண்ணம் பேச்சுக்கள் சிவக்க வேண்டும்
பார் அவை குரலைக் கேட்டுப் படை ஒன்றை அனுப்பல் வேண்டும்
மாறுகை, கால்கள் வாங்கி மடிந்திடச் செய்த போதும்
ஏறுகள் போல் நிமிர்ந்து எழில்தமிழ்ப் பணி செய்வோமா?

ஆண்ட நம் இனத்தை இன்று பூண்டொடு அழிக்கும் கொள்கை
பூண்டவராட்சியானர்— புதுப்புதுக் குழிகள் தம்மைத்
தோண்டவே பார்ப்போர் தம்மைத் தொலையடா தொலைத்துக்கட்டு
மீண்டுநாம் ஆட்சி செய்வோம் மிடுக்குடன் நிமிர்ந்து வாழ்வோம்

என்னடா பார்க்கின்றாய்?! உன் அன்னையின் கோலம் பார்த்து
உன்னை நீ தரக்கூடாதா? ஒரு நொடி எழக்கூடாதா
பன்முறை சிந்திக்காதே, பயணத்தின் பின் நிற்காதே
உன்னரும் தமிழ்த் தாயுன்னை உச்சி மோர்ந்தனுப்பினளே.

கண்மணி வாடா! உன்றன் கடமைகள் மிக ஏராளம்
உன் பணியாலே உன்தாய் உயர்தலைக்காணும் ஞாலம்
அம்மணி ஆட்சி செய்வாள், அழகிய தமிழ்ப் பாராளும்
பொன்மணித் தேரிலுன்தாய் பூரிப்பாய் வருவாள் நாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழன் சிந்தனைக்கு....!

இந்நாட்டில் தமிழ் பேசும் மக்களை ஒழித்துக்கட்ட- தமிழினத்தை வேரறுத்திட—சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் பல்வேறு திட்டமிட்ட சூழ்ச்சிகளிலும் உபாயங்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகத்தில் சிங்களவர்களை குடியேற்றுவதன் மூலம் தமிழர் பூமியை அபகரிக்கும் சூழ்ச்சித்திட்டம் கடந்த 30 ஆண்டுகளாக நாளிலும் பொழுதிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் பயனாக அங்குலம் அங்குலமாக நமது அருமைத் தமிழ் மண்ணை இழந்துகொண்டிருக்கிறோம். இதுவரை ஏறத்தாழ இரண்டாயிரம் சதுரமைல் தமிழ் ஈழ மண்ணை சிங்கள ஆக்கிரமிப்பாளரிடம் இழந்து விட்டோம்.

தமிழ் சமுதாயத்தில் பின்தங்கிய மக்களுக்கு—கொடிய தீண்டாமை சாதிவேறுபாடு போன்ற சமுதாயத்தீமை காரணமாக மனம் புழுங்கியிருக்கும் தமிழ் மக்களுக்கு ஆசை வார்த்தை காட்டி, அற்பசலுகைகளைக் கொடுத்து. அவர்களை முதலில் மதம் மாற்றி பின்னர் இனம் மாற்றச் செய்யும் மற்றோர் சூழ்ச்சியிலும் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கிறது.

இன்னோர்புறம் தமிழ்—சிங்கள கலப்பு மணங்களை ஊக்குவித்து தமிழ்ச்சாதியை கலப்புச் சாதியாக இனமாற்றும் வேறோர் திட்டமும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இன்னோர் புறம் இனிப்புத்தடவிய விஷமாக மும்மொழித்திட்டம் என்ற போர்வையின் கீழ் சிங்களத்தை திணித்திட சதித்திட்டம் போடப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் — தமிழ் சமுதாயத்தை வேரறுத்திட, அதன் தனித்துவத்தை இல்லாமற் செய்திட, தமிழ் கலாசாரத்தையும் பண்பையும் மாசுபடுத்தி, அதை ஒரு கலப்புக்கலாசாரமாக்கிட, பௌத்த மதத்தையும் சிங்களத்தையும் புகுத்திட, தமிழர் எண்ணிக்கை பலத்தை படிப்படியாக வீழ்ச்சியுறச் செய்திட, சிங்கள ஏகாதிபத்தியம் பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கும் வேளையில் அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் மற்றோர் செய்தி வேதனை தருவதாக அமைந்துள்ளது.

அதாவது — குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வோர் தொகை யாழ்ப்பாணத்திலேயே மிக அதிகமாக இருப்பதாக புள்ளிவிபர அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. இது உண்மையிலே வேதனை தரத்தக்க ஒரு செய்தியாகும்.

பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தின் எண்ணிக்கை பலத்தை மேலும் குறைத்து — அதன் பலத்தை வெட்டிவீழ்த்தி—தனது வயிற்றுக்குள் விழுங்கி ஜீரணித்துக் கொள்வதன் மூலம் "தேசிய ஒருமைப்பாட்டை" உருவாக்கி. இலங்கையை ஒரே மொழி ஒரே இனம், ஒரே மதம் கொண்ட நாடாக்கி விடலாம் என்று திட்டமிட்டு செயற்பட்டு வரும் வேளையில்—அதற்கு ஒத்தாசை செய்வதுபோல — யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளி கொட்டிக்கொள்வது போல—தமிழ் மக்கள் நடந்து கொள்வது — குடும்பக்கட்டுப் பாட்டுத்திட்டத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு நல்குவது வரவேற்கக் கூடிய விஷயமல்ல.

சோவியத் ரஷியா, சீனா போன்ற கம்யூனிசநாடுகளில் குடும்பக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்படுவதாக நாம் கேள்விப்படவில்லை; அதிலும் குறிப்பாக சிறுபான்மை இனங்களின் எண்ணிக்கை அரசியல் பலம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக சிறுபான்மை இனங்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்வது அங்கு தவிர்க்கப்பட்டிருக்கிறது.

இங்கோ சிறுபான்மை மக்கள் மத்தியிலேதான் மிகத் தீவிரமாக குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரசாரம் நடத்தப்படுகிறது; ஊக்குவிக்கப்படுகிறது; அதாவது, தமிழ் சமுதாயத்தின் எண்ணிக்கைபலத்தை குறைப்பதற்கு குடும்பக்கட்டுப்பாடும் ஓர் ஆயுதமாக இங்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த உண்மையை தமிழ்மக்கள் உணர வேண்டும்.

சீதனம், வாழ்க்கைச்சுமை போன்ற சமுதாயப் பிரச்சினைகளை எதிர்நோக்க அஞ்சி, தமிழ் மக்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வது நீண்டகாலக் கண்ணோட்டத்தில் தமிழினத்துக்கு பெருந்தீமையாகவே முடியும். இதை உணர்ந்துதான் அமரர் வன்னியசிங்கம் போன்ற மறைந்த தலைவர்கள் தீர்க்கதரிசனத்துடன் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் தமிழ் சமுதாயத்துக்கு கேடுபயக்கும் என்று அன்றே எதிர்ப்புத் தெரிவித்தனர்.

குடாநாட்டைக் கழிந்து சென்றால்—நீண்டு பரந்த நிலம் வவுனியாவிலும், மன்னாரிலும், திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் நம்மை வாவென்றழைக்கிறது: குடா நாட்டுக்குள் சுருண்டுபடுத்திருக்கும் தமிழ் மக்கள் இங்கெல்லாம் சென்று குடியேறி, தமிழ்மண்ணை வளப்படுத்தி, அதைக்காத்து தம் வறுமையையும் துடைத்துக்கொள்ளமுடியும்.

எனவே வறுமைக்கும் சீதனக்கொடுமைக்கும் அஞ்சி தமிழ்மக்கள் குடும்பக்கட்டுப்பாட்டில் தீவிரநாட்டம் கொள்ளுவது, தமிழினத்தின் பலத்தை மேலும் பாதிக்கவேசெய்யும் என்பதை உணர்ந்து, குடும்பக்கட்டுப்பாடு தமிழர் குலத்துக்குக்கேடு என்பதை புரிந்து, தமிழ் சமுதாயம் ஒரு சிறுபான்மை இனமாக இருக்கும்வரை—அதாவது தமக்கென்றோர் நாடு அமைத்து ஒரு தனித் தேசிய இனமாகும்வரை—குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதை தவிர்த்து தமிழர் எண்ணிக்கையை பெருக் [illegible] மையென்பதை இங்கு [illegible]

# மொழிக்கு முதலிடம் கொடுங்கள்! நிலத்தை காக்க ஓடிவாருங்கள்


## தமிழர்களுக்கு சூசைதாசன் அறிவுரை!

"தமிழர்கள் தங்கள்வாழ்வில் ஒவ்வோர் துறையிலும் தமிழ்மொழிக்கு முதலிடம் தர வேண்டும்; பரந்துபட்டுக்கிடக்கும் வளமான தமிழ்நிலத்தில்வந்து குடியேறி தமிழ்ஈழத்தின் உணவுற்பத்தியை பெருக்க வேண்டும். இது இரண்டையும் செய்தால், நமது சுதந்திரம் நம்மை வந்தடையும்!"

இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அமரர் ஜீ ஜீ. முதலாண்டு நினைவு அஞ்சலிக்கூட்டத்தில் பேசிய மன்னார் பா.உ. திரு. சூசைதாசன் குறிப்பிட்டார். திரு.மு. சிவசிதம்பரம் பா.உ. தலைமையில்நடைபெற்றஇக் கூட்டதில் அவர்மேலும்பேசியதாவது:-

"எல்லாம் தமிழியக்கத்தை தமிழர்கள்வாழ்வின் எல்லாக் கட்டங்களிலும், எல்லாத்துறைகளிலும்பயன்படுத்தவேண்டும். தாம் ஆற்றும் ஒவ்வொரு கருமத்தையும் தமிழிலேயே ஆற்ற வேண்டும். அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் போதும்சரி, தனிப்பட்டதங்கள் வாழ்விலும் சரி தமிழிலேயே யாவற்றையும் செய்தல் வேண்டும். தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணா இந்த அடிப்படையிலேயே தமது இயக்கத்தை ஆரம்பித்தார். அண்ணா கட்சியிலும், தொடர்ந்துவந்த கருணாநிதி ஆட்சியிலும் தமிழ்நாட்டில் எல்லாம் தமிழ், எங்கும் தமிழ், எதிலும்தமிழ் என்ற மகிழ்ச்சியான நிலைமை ஏற்பட்டது.

"நான் இங்கு யாழ்ப்பாணத்திலுள்ள கடைத்தெருக்



களை சுற்றிப் பார்த்தேன். நூற்றுக்கு நூறுவீதம்தமிழர் வாழும் இந்தநாட்டில், தமிழர்கள் தமிழர்களுக்காவே நடத்தும் கடைகளிலும் பெயர்ப் பலகைகளில் ஆங்கிலமே பெரிய இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் எங்கோ ஓர் மூலைக்குள் அடிமை போல முடங்கிக் கிடக்கிறது. உன் இந்த வெட்கக்கேடான நிலை நம் மத்தியில் இருக்க வேண்டும்! நாம் நமது இடத்தில் நமது மொழிக்கு முதலிடம் கொடுக்கமறுத்தால், வேறு யார் நமது மொழியை மதிப்பார்கள்? எனவே இது விஷயத்தில் தமிழ் இளைஞர் பேரவையினர் தலையிட்டு எல்லாம் தமிழ்- தமிழுக்கே முதலிடம் என்னும் மொழிப் புரட்சியை, மறுமலர்ச்சியை தமிழ் ஈழத்தில் தோற்றுவிக்க வேண்டும்; இது முதலாவது காரியம்.

அடுத்து, மகாவலி வரப் போகிறது; மன்னாரிலும், திருகோணமலையிலும் பல்லாயிரம் ஏக்கர்களுக்கு அது நீர்ப்பாசனம் அளிக்கப் போகிறது; இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த நிலங்களில் குடியேறி நமது வறுமையைத் துடைக்கவும், உணவுற்பத்தியை பெருக்கவும், நாட்டைக் காப்பாற்றவும், தமிழ்மக்கள் முன்வரவேண்டும். வளம் நிறைந்த மண் நம்மை அழைக்கிறது. வாய்ப்பை நழுவவிடாமல், மகாவலிப் படுக்கையில் குடியேறி தமிழ் நிலம் காக்க இளைஞர்களே முன் வருவீர்!"

# வி. பி. வெளியேற்றம்! கூட்டணியுடன் இணைவாரா?

இலங்கை "கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக்கிளையின் தூணாக இருந்தவரும், கட்சியின் நீண்டகால உறுப்பினருமான திரு. வி. பொன்னம்பலம் அவர்கள் கட்சியிலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டு விட்டதாக தெரிய வருகிறது. திரு. பொன்னம்பலத்தை கட்சியிலிருந்து வெளியேற்றும் முடிவு 12-2-78ல் எடுக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

தமிழ் மக்கள் ஒரு தனித் தேசிய இனமென்பதையும், ஒரு தேசிய இனம் என்ற வகையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், திரு. வி. பொன்னம்பலம் வெளிப்படையாக தமதுகட்சியுடன் அண்மைக்காலமாகப் பொருதி வந்தது தெரிந்ததே. இதனால் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி விட்டதாக திரு. பொன்னம்பலம் கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டு, பல விசாரணைக்குட்படுத்தப் பட்டார். இப்போது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடம் திரு. வி. பொன்னம்பலத்தை கட்சியிலிருந்து முற்றாக நீக்குவதென்று முடிவு செய்துள்ளது.

திரு. வி. பொன்னம்பலம் அவர்களின் அரசியல் எதிர்காலம் என்ன? அவர் கூட்டணியுடன் சேருவாரா? அல்லது தமிழ் ஈழக்கம்யூனிஸ்ட் கட்சியென்ற ஓர் அமைப்பை ஏற்படுத்துவாரா? தமிழ் ஈழக் கம்யூனிஸ்ட் கட்சியை கம்யூனிஸ்ட் உலகம் அங்கீகரிக்குமா? இவைபற்றி திரு. வி. பொன்னம்பலம் ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்துடன் கலந்து பேசியே திரு. பொன்னம்பலம் எந்த முடிவுக்கும் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ராஜன்புத்தகசாலை
12, பஸ்நிலையம்
யாழ்ப்பாணம்.

## திறப்புவிழா

எதிர்வரும் 20-2-78 பகல் 12மணியளவில் மேற்கூறிய எமதுஸ்தாபனத்தை திறந்து வைக்க நிச்சயித்துள்ளோம். ஆதலினால் அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்
ராஜன்புத்தகசாலை.

## வாழ்த்துகிறோம்



தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்களான சட்டத்தரணி க. வே. மகாதேவன், திருமதி மகாதேவன் தம்பதிகளின் புதல்வன் ஜனார்த்தனன் தனது முதலாவது பிறந்த தினத்தை குரும்பசிட்டி 'மணி மகால்' இல்லத்தில் (20 - 2 - 1978) சிறப்பாகக் கொண்டாடுகின்றார். பல வளமும் பெற்று வாழ அவரை வாழ்த்துகிறோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்கள் மீட்சிபெறுவதற்கு தரப்படுத்தல் நீடிக்கவேண்டுமாம்

## மடிகே பஞ்ஞாசீகதேரோ வலியுறுத்தல்!

"தந்தையே, தலைமகனின் துயர் துடையுங்கள்" என்ற தலைப்பில் சிலநாட்களுக்கு முன் சிங்களப் பத்திரிகைகளில் மடிகேபஞ்ஞாசீகதேரோ வெளியிட்ட கருத்துக்கள்!—

'நாட்டு மக்களைத் தான் பெற்ற பிள்ளைகளாகக்கருதி செயற்படுவதுதான் ஆட்சியாளருக்கு அழகு என்பது புத்த பகவானின் புனித போதனைகளுள் ஒன்ருகும். அதன்படி பிரசைகள் அனைவரும் சமமானவர்கள் என ஜே. ஆர். கூறியுள்ளமை வரவேற்கத்தக்கதே! நாட்டின் தந்தையான அவர் எல்லாப் பிள்ளைகள் மீதும் ஒரே அளவான பாசத்தைக் காட்டலாம்; பரிவைச்சொரியலாம்; ஆனல் பராமரிப்பு நிச்சயமாக மாறுபட்டே ஆகவேண்டும். மூத்தபிள்ளை வளர்ந்துவிட்டவன்; உணவு, உடை, உறையுள்—பண விடயத்தில் மற்றவர்களைவிட இவனுக்கு முனனுரிமையும் முக்கியத்துவமும் கொடுக்க வேண்டியது மிக மிக அவசியம்.

மேலும் மூத்த இனமான சிங்கள இனம் நானூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்து, சகலதுறைகளிலும்பின் தங்கிவிட்டபடியால்—நோய்வாய்பட்ட மூத்தமகன் தேறுவதற்கான சகல முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு அவனை நன்கு பராமரிக்கவேண்டும். முக்கியமாக கல்வித்துறையில் அவன் விடயத்தில் கருணைகாட்டவேண்டும்.

"1959 சனத்தொகைப்படி 3,000 சிங்களவர்க்கு ஒரு சிங்கள மகனே பல்கலைக்கழகம் புகுந்த அதேநேரத்தில் 300 தமிழனுக்கு ஒருவன் என்ற விகிதத்தில்தமிழன்பல்கலைக்கழகம் புகுந்திருக்கிருன். நல்ல வேளையாக தரப்படுத்தும் முறை அறிமுகமானபடியால் மூத்த மகன் காப்பாற்றப்பட்டான்.

"தகுதி அடிப்படையில் பல்கலைக்கழகப் பிரவேசம் என்பதைஒருவாதத்துக்காக நாம் ஏற்றுக்கொண்டாலும் வினாத்தாள்களை இரகசியமான முறையில் வெளியிடுதல்—அதிகமான புள்ளிகளை அள்ளிப்போடுதல் போன்ற செயல்களினுலும் நாம் பாதிப்புற வேண்டியுள்ளது. மேலும் 91 பிள்ளைகளுக்கு ஒரு கல்லூரி என்ற விகிதத்தில் அதிக கல்வி வசதிகள் கொண்ட தமிழ்ப்பிள்ளைகளுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில பள்ளிக்கூடங்களை மட்டுமே பெற்றுள்ள நமது சிங்களப் பிள்ளைகள் போட்டிபோட முடியுமா?

"எனவே தகுதி அடிப்படை என்பதை நீக்கி தரப்படுத்தல் முறையைப் பின்பற்றுவதே நோய் வாய்ப்பட்டு போசாக்கிழந்துள்ள மூத்த மகனைக் காப்பாற்றுவதற்கு ஒரே வழி! இதை நாம் கூறுவதால் எம்மை இனவாதிகள் என்று எவரும் தவருகஎடைபோட்டு விடக்கூடாது. ஏன் என்ருல் எமது உரிமையைத் தான் நாம் கோருகிருேம். இங்கு நான் குறிப்பிட்டுள்ளது நமது நாட்டில் நமது இனத்தவர் கல்வி பெறுவதில் உள்ள சிரமத்தில் ஒரு சிறு பகுதி மட்டுமே!

(ரிவிரச 8-1-78)

## விடுதலைப்போரின் கிழக்கீழத்தளபதி!

"அமரர் இராசமாணிக்கத்தின் இடத்துக்கு மிகப் பொருத்தமான இன்னெரு தலைவர் எமக்குக் கிடைத்திருக்கிருர். போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படுகிறபோது பட்டிருப்புப் பா. உ. திரு. கணேசலிங்கம் அவர்கள், பட்டிருப்புத் தொகுதிக்குதலைமை தாங்கி முன்னல் போவார் என்பதில் எங்களுக்கு அணுவளவும் ஐயம் கிடையாது."

—முனைக்காடு த. வி. கூ. பொதுக்கூட்டத்தில் கவிஞர் காசிஆனந்தன்.

"தம்பி காசிஆனந்தன் வயதில் எனக்கு இளையவர். ஆனல் இயக்கத்திலோ எனக்கு மூத்தவர் போராட்டம் வருகிறபோது பட்டிருப்புத்தொகுதிக்கு நான் தலைமை தாங்குவேன் எனச் சொன்னர். நான் கூறுகிறேன்—அப்படியான ஒரு போராட்டம் வருகிறபோது—கிழக்குமாகாணம் முழுவதற்குமே தம்பி காசிஆனந்தன் தான் இளம்தளபதியாக நின்று தலைமைதாங்கி அதை வழி நடத்துவார்; நாங்கள் அவர் பின்னல் செல்ல ஆயத்தமாக இருக்கிருேம்!"

—முனைக்காடு கூட்டத்தில் பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கம்.

## வெறிகொள்...

—6-ம் பக்கத் தொடர்

தில் வரும் யோகம் என்ற பாத்திரம் தற்கொலை செய்வதையிட்டு கவலைப்படும் தமிழர்கள்பலர், இந்த நாட்டில் எத்தனையோ யோகங்கள் தமது நிஜ வாழ்க்கையில்இனப்புயலால் மானபங்கம் செய்யப்பட்டு தற்கொலை செய்ததைப் பற்றி கவலைப்படுவதாக இல்லை. சீதனக் கொடுமைகளால் எத்தனையோ யோகங்களின் வாழ்க்கையில் சீர்கேடுற்று அவர்கள் தற்கொலை செய்து கொள்வதைப்பற்றி சிந்திப்பதாகவில்லை: விடுதலைக்கு ஒரு பங்குதானும் அளிக்காமல் எவனெருவனுக்கும் விடுதலை இயக்கத்தைப் பற்றி விமர்சனம் செய்ய அருகதையில்லை. இலக்கியத்தின் மூலம் விடுதலை வேட்கையைத் தூண்டி விடுதலைக்கு இட்டுச் செல்ல வேண்டும்." என்ருர்.

இதன்பின்னர் திரு. எஸ். வி. சந்திரகாசன் அவர்கள் உரையாற்றினுர்கள். அவர் தமதுரையில் கூறியதாவது:-

"தமிழ் மக்களது எண்ணங்களையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கக் கூடியதான ஒரு சஞ்சிகை தேவை என்ற எமது நீண்டகால ஆவலின் விளைவாக உருவானதேசுடர் சஞ்சிகையாகும். வாழைச்சேனையில் உற்பத்தியாகும் கடதாசியைக் கொண்டே முழுக்க முழுக்க சுடரை அச்சுப்பதிப்பு செய்து வெளியிடுகிருேம. முன்னர் சுதந்திரன், சுடர் இரண்டையும் ஒரே இடத்தில் வைத்தே வெளியிட்டோம். தமிழீழ இலட்சியத்திற்குப்போராடும் நாம் எமது உடைமைகளை தமிழீழத்திற்கு எடுத்துச் செல்லும் முன்னேடித் திட்டமாகவே சுதந்திரனை தமிழீழத்தின் ஒரு பகுதிக்கு மாற்றினேம். இப்பொழுது தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் சஞ்சிகைகளுக்கான தடை நீக்கப்பட்டுவிட்டது. இதனுல் உள்ளூர் சஞ்சிகைகளின் விற்பனை பாதிக்கப்பட்டுவிடும் என அஞ்சத்தேவையில்லை. தமிழக சஞ்சிகைகளின் இறக்குமதி எந்த விதத்திலும் சுடர் வளர்ச்சியைப் பாதிக்கவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வாசகர்களும் எமது இலட்சியத்தையேசுடர்எடுத்தியம்புவதால் பெருமளவில் சுடரை விரும்புகிருர்கள். சஞ்சிகைகள் மக்களது சிந்தனைசக்தியைத் தூண்டிவிடக் கூடிய தன்மையாக அமைதல்வேண்டும். "சுதந்திரன்," ஆட்சியாளரால் தடை செய்யப்பட்டாலும் மக்களுடன் தொடர்புகொள்ள "சுடரை" அதற்காகப் பயன்படுத்த பின்னிற்க மாட்டோம். தி.மு.க ஏககாலத்திலேயே 52 வெளியீடுகளை ஒரு முறை வெளியிட்டது; நாம் இன்று சுடருக்காக எழுத்தாளர்களது படைப்புகளையே பெருமளவில் கோரிவிற்கிருேம். இதற்குப்போதியளவு படைப்புகளை அனுப்பிவையுங்கள். எழுத்தார்வம் உள்ளவர்களை எழுதத் தூண்டுங்கள். எழுத்தாளர்கள் ஒன்றிணைந்து சுடர் சஞ்சிகைக்கு தேவையான படைப்புகளை படைக்க வேண்டும். வெகுவிரைவில் கல்லூரி மாணவர்களுக்கு பயன்படக் கூடிய முறையில் நாம் ஒரு விஞ்ஞான சஞ்சிகையையும் வெளியிட உத்தேசித்துள்ளோம்." என்ருர்.

இறுதியாக உணர்ச்சிக் கவிஞர் காசி. ஆனந்தன் அவர்கள் உரையாற்றினுர்கள்: அவர் தமது உரையில் கூறியதாவது:-

"தந்தை செல்வாஅவர்கள் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து பெரும் சுமைகளுக்கு மத்தியில் சுதந்திரனை வெளியிடத் தொடங்கினுர். எத்தனையோ பத்திரிகைகள் இடையில் நின்றுவிட்டபோதும் சுதந்திரனே ஆட்சியாளரால்தடை செய்யப்பட்ட காலங்களில் தவிர, ஏனைய காலமெல்லாம் தொடர்ந்து வெளி வந்துகொண்டேயிருக்கிறது. தமிழக சஞ்சிகைகளுக்கு தடை விதிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் உச்ச கட்டத்திலிருந்த போது தான் நாம் சுடரை வெளியிட்டோம். நாம் அத்தகையகோஷங்களை எதிர்த்தோம். கோயிலுக்குச் செல்லும் பக்தன் அங்குள்ள சுவர்களில் காணப்படும் பெண்களின் ஓவியங்களில் மையல் கொள்ளாது இலிங்கத்தையே நோக்குவது போல் இலட்சியப் பற்றுள்ளவர்கள் எவ்வித சலனங்களுக்கும்இடம்கொடாது அதையே நோக்கிடும் வகையில் சுடரில் நாம் அதற்குணகம் அமைத்துக் கொடுத்தோம். இக்பால் நினைவு விழாக்கள் கொண்டாடப்படும் இக்கால கட்டத்தில் அக்கவிஞன் விடுதலைக்கு எவ்விதம் இலக்கியத்தைப் பயன் படுத்தினுனே அதே நோக்கில் நின்று தான் சுடரையும் பயன் படுத்துகிருேம். சுடர் விடுதலை இயக்கத்தின் ஒரு கருவி. அதை நாம் பெயரளவில் பயன்படுத்த வேண்டும், சுடரை நீங்கள் வளர்க்க வேண்டும்' சுடரை வளர்க்க உங்கள் ஆலோசனைகளை சுடருக்கு தவருமல் எழுதுக. சுடரி எழுத்தாளர்கள் இயக்கத்தின் தூண்கள். விடுதலைக்குப் போராடும் நிலையில் எமது தலைவர்கள் குறிப்பிடும் விடயங்களின் உணர்ச்சியைத் தொடும் பகுதிகளை சுடருக்கு கட்டாயமாக அனுப்பி வையுங்கள். நேரு, காந்தி போன்ருேரது கூற்றுக்களையே மீண்டும் மீண்டும் குறிப்பிட்டால் போதாது. பல்கலைக்கழகப் பேராசிரியர்களான வித்தியானந்தன், பத்மநாதன் போன்ருேரது கூற்றுக்களை திரட்டி பல்கலைக்கழக மாணவர்கள் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விடுதலை உணர்ச்சியுடன் மட்டும் படைப்புகளை அனுப்பி வைத்தால் போதாது எமது விடுதலைக்கு தடையாகவோ தயாராகாமலோ இருக்கும் ஏதுக்களையும், காரணிகளையும் புட்டுக்காட்டி சுடருக்கு படைப்புகளை அனுப்பி வையுங்கள், எழுத்தாளர்கள் தமிழர் சமூகத்தில் காணப்படும் அமுக்குகளையும் அமுக்கப்பட்ட நிலைகளையும் படம் பிடித்துக்காட்டி தமது படைப்புகளை படைத்து எமக்கு உதவுதல் வேண்டும். சமூகத்தில் காணப்படும் சீதனப்பிரச்சினைகளையும் சாதிப் பிரச்சினைகளையும்சாடி எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை எமக்கு அனுப்ப வேண்டும்,

இருபது வருடங்களுக்கு முன்னல் நான் ஒரு கவிதை பாடினேன். அந்தக் கவிதை இது தான்,

மறவர் படைதான் தமிழ்ப்
படை—குல
மானம் ஒன்றே அடிப்படை
வெறிகொள் தமிழர்
புலிப்படை
அவர்வெல்வார் என்பது
வெளிப்படை

இந்தக் கவிதை இருபது வருடங்களுக்கு முன்னல் நான் பாடிய போதும் இப்பொழுது எங்கேயோ, என்னவோ நடக்க, யாரோ; என்னத்தையோ எங்கேயோ விட்டுவிட்டுப் போக நான் இரகசியப் பொலிசாரால் விசாரிக்கப்பட்டேன். பாரதி ஒரு முறை சிங்களம், புட்பகம், யாவகம் முதலிய இடங்களில் குடியேறி புலிக்கொடி மீன்கொடி, விற்கொடி பொறித்த தமிழினம் என தமழினத்தைப் பற்றிப் பாடினுன். இன்று அவன் உயிரோடு இருந்தால் அவனும் விசாரணைக்குள்ளாகியிருப்பான்". என்று மேலும் திரு. காசி ஆனத்தன் தமது பேச்சினூடாக தமக்கு நேர்ந்த இன்னல்களையும் சுட்டிக் காட்டினுர்.

தொகுப்பு:
பொன் பூபாலசிங்கம்,
செயலாளர்
சுடர் இலக்கிய மன்றம்
கொழும்பு


இப்போது விற்பனையாகிறது!

மெழுகுவர்த்தி

மேட்டுக்குடியிலே முகிழ்த்த ஒரு மனிதன், தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த சுகவாழ்வையும் புவன போகங்களையும் புறக்கணித்துவிட்டு தமிழ் விடுதலைப் போரின் சுட்டிமுனையாக மாறினுன். அந்த மறவனுடன் இலட்சியப்பாதைவழியே வழித்துணை சென்ற ஒருவனின் நாட்குறிப்புகள் இது.

நூலாசிரியர்: கரிகாலன்

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யின் மதிப்புரையுடன்

கிடைக்கும் இடம்! சுதந்திரன் அலுவலகம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மற்றும் எல்லா சுதந்திரன் ஏஜண்டுகளிடமும்.



"சிவராத்திரி விரதம்"

10 மில்க் வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் சோப் அல்லது 2 மெடிக்கேட்டட் சோப் அல்லது 2 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி சிறந்த நூலை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெறிகொள் தமிழர் புலிப்படை - அவர் வெல்வார்என்பதுவெளிப்படை!'

கொழும்பு சுடர் கலை இலக்கிய மன்றத்தின் 'சுடர்' வளர்ச்சிக் கருத்தரங்கொன்று 11-2-78 சனிககிழமை மாலை கொள்ளுப்பிட்டியிலுள்ள தேயிலைப் பிரசாரசபை மண்டபததில் நடைபெற்றது, அண்மைக் காலத்தில் கொழும்பில் நடைபெற்ற பல கருத்தரங்குகளிலும் பார்க்க இக்கருத்தரங்கு பல வழிகளிலும் களைகட்டியிருந்தது. கருத்தரங்கிற்கு மன்றத் தலைவர் திரு. க. ஆராஜமனோகரன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கருத்தரங்கின் ஆரம்பததல் அண்மையில் காலமான பழம் பெரும் தமிழ்த்தொண்டர், 'வவுனியூரககவிராயர்' அவர்களுக்கு 2நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தபபட்டது.

எதிர்நீச்சல் போட முடியாமல் இருந்தவர்கள் அவை தரமற்றவை எனக் கூச்சல் போட்டனர். இதனால் அப்

லும் சுடருக்கு வந்து சேரும் படைப்புக்கள் போதாமலிருக்கின்றன. ஆகையால் பல் கலைக்கழக சஞ்சிகைளில் தம்

சகல சுடர்கலை இலக்கிய மன்றங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு சுடர் வளர்ச்சிக்குப்பாடுபட வேண்டும். சுடர் எழுத்தாளர்கள் நிறைய சுடருக்கு தமது படைப்புக்களை அனுப்பி வைக்க வேண்டும். எழுத்தாளர்களது படைப்புகளில் எமது இலட்சியத்தின் சாயல் நன்கு தொனிக்க வேண்டும்'' என்றார்.

இதன் பின்னர் உரையாற்றிய திரு. சண்முகநாதன்

என்பதைநாம் ஆராயவேண்டும். தமிழக சஞ்சிகைகளில் ஈழத்து தமிழ்மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கப் பட வேண்டும். விடுதலை உணர்ச்சியை பிரதிபலிக்க வேண்டும். இந்த வகையில் வெளிவரும் ஒரு சஞ்சிகையாக சுடர் மிளிர்கிறது ''விடுதலை'' என்ற சொல் வரும் சஞ்சிகைகளை வாங்க சிலர் பின்வாங்குகிறார்கள். எமக்கு சிறுகதைகள் வேண்டும், நாவல்கள் வேண்டும், கவிதைகள் வேண்டும்.

## 20 ஆண்டுகளுக்குமுன் இவ்வாறு பாடினேன்; இன்று என்னிடம கேள்வி கேட்கிறார்கள்!

### 'சுடர்' கருத்தரங்கில் கவிஞர் காசி ஆனந்தன் பேச்சு!



கருத்தரங்கிற்கு தலைமை வகித்த திரு. இராஜ மனோகரன் தமது தலைமையுரையில் கூறியதாவது:—

''முன்பு தமிழ் நாட்டிலிருந்து சஞ்சிகைகள் இறக்குமதி செய்யப்பட்டபோது திறமையின் அடிப்படையில்

போதைய அரசாங்கமும் இதை சாதகமாக்கிக் கொண்டு தமிழக சஞ்சிகைகளை வகுப்புவாதக் கண்ணோட்டத்துடன் தடைசெய்தது. எம்மிடம் ஆற்றல் இருந்தால் அந்த ஆற்றலை நாம் போட்டி போட்டு வெளிப்படுத்தல் தான் முறையானது. இந்தவகையில்தான் இன்று சுடர் ''இலக்கிய உலகில்'' வீறு நடை போடுகிறது. ஆனா

படைப்புக்களைபிரசுரிக்கமுயலும் பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஆக்கங்களை சுடருக்கு அனுப்பிவைக்க தயக்கம் காட்டக் கூடாது'' என்றார்.

இதை அடுத்துப்பேசிய திரு. ரகுபதிபால ஸ்ரீதரன் அவர்கள், ''சுடர் எமக்காக வெளிவருகிறது. எந்த இடர் வந்தாலும் அந்தஇடரை தாங்க வேண்டியது எமது தலையாய பணியாகும்: நாட்டின்நாலா பாகங்களிலும் இருக்கும்

(மாஸ்டர்) அவர்கள் தமது ரையில், கூறியதாவது:—

இலக்கியவளர்ச்சி என்பது அதைப்படைப்பவர், வாசிப்பவர், விமர்சிப்பவர் ஆகிய மூவரது கையிலும் தான் தங்கியுள்ளது. இலக்கியம் என்பது ஒருகுறிப்பிட்ட சமுதாயத்தின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதாகவிருக்க வேண்டும்,எமது சிந்தனையின் பிரதிபலிப்பு எமது படைப்புகளில் பிரதிபலிக்கிறதா

ஆனால் இவையாவும் எமது இலட்சியத்தைப் பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டும், ஆனால் எமது இலட்சியத்தைப் பிரதிபலிக்கும் இலக்கியமோ அருகியே காணப்படுகின்றது. இலக்கிய மூலம் தான் நாம்சாதாரண மக்கள் மத்தியில் எமது கருத்துக்களை இலகுவாகப்பரப்ப முடியும். வானொலியில் ''தணியாத தாகம்''என்ற நாடகத்

—5-ம் பக்கம் பார்க்க

## சுதந்திரத்துக்...

— 3ம் பக்கத் தொடர்

யங்களும் தாக்கப்பட்டிருக்கின்றன. எனவே இது ஓர் திட்டமிட்ட ஒரு குழுவின் செயலா என்பது பற்றி ஆணைக்குழு ஆராய வேண்டும்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற போது பொலிசார் ஏராளமானோரைக் கைது செய்தார்கள். அப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். இவர்களை விளக்க மறியலில் வைத்த நீதிபதிகளின் குறிப்புக்களை இந்த ஆணைக்குழு வரவழைத்துப் பார்க்குமானால், கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதற்கான காரணங்களைக் கண்டுகொள்ள முடியும். இந்த ஆவணங்களிலிருந்து இச் சம்பவங்களின் பின்னாலுள்ள இயக்கத்தையோ, ஆட்களையோ ஆணைக்குழு கண்டு பிடிக்க முடியும்.

இப்படிப்பட்ட சம்பவங்களை நேரடியாகச் சென்று கண்டறிந்து அறிக்கைசமர்ப்பிப்பதற்காக, ஆணைக்குழு ஒருவிசாரணைச்சபையை நியமித்து அதை எல்லா இடங்களுக்கும் அனுப்பி தகவல் சேகரிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்கவும், புனர் வாழ்வு கிடைக்கவும்,தகுந்த வழிவகைகளையும், ஆலோசனைகளையும் ஆணைக்குழு முன் வைக்க வேண்டும்.

இத்தகைய கலவரங்கள் தோன்றுவதற்கான காரணிகள் பற்றியும் இந்த ஆணைக்குழு ஆராயவேண்டும்.

இலங்கையில் முதலாவது இனக்கலவரம் 1915ம் ஆண்டு இடம்பெற்றது. சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே அந்தக்கலவரம் நடைபெற்றது. அந்த இனக்கலவரத்தின் பெறுபேறாக, இலங்கையில்வாழும் இரு பெரும் தேசியஇனங்களான சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஒற்றுமை ஏற்படும் சாத்தியம் தோன்றியது. சிங்களவரும், தமிழருமாகச் சேர்ந்து சுதந்திரத்துக்குப் போராடினார்கள். சேர். பொன்னம்பலம் ராமநாதன் இதில் ஏற்றிருந்த பங்கு வரலாற்றுச் சிறப்புக்குரியது. இலங்கைக்கு சுதந்திரம் என்ற பொதுவான இலட்சியத்தை முன்வைத்து தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றுபட்டு உழைத்தனர். அதனால் 1948ம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது.

அடுத்து 1948ம் ஆண்டு இலங்கைக் குடியுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தக் குடியுரிமைச் சட்டம் இந்திய தமிழ்சமுதாயம்முழுவதிலும் குடியுரிமையை அபகரித்து இல்லாதொழித்தது.பலநூற்றாண்டுகள்இங்கு வசித்ததால் அவர்களுக்கு கிடைத்திருந்த இந்த அடிப்படை உரிமை, குடியுரிமைச் சட்டத்தின் காரணமாக மறுக்கப்பட்டது. இதன்காரணமாக இந்நாட்டின் பொருளாதார வளத்துக்காக உழைத்துக் கொண்டிருக்கும் இந்தியத்தமிழ மக்கள்நாடற்ற மக்களாக வாழும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக 1948ம் ஆண்டிலிருந்து, அடிக்கடி இம்மாதிரி சம்பவங்கள் ஏற்படலாயிற்று.

அடுத்து வந்தது 1956ம் ஆண்டின் உத்தியோகமொழிச் சட்டம். இந்த உத்தியோகமொழிச் சட்டத்தின் படி, சிங்களம் மட்டுமே உத்யோக மொழியாகதிணிக்கப்பட்டது. அதன் பின்னர்' தமிழ்மொழி விசேட விதிகள் சட்டம் கொண்டுவரப்பட்டதென்றாலும், அதை செயற்படுத்த பிரமாணங்கள்நிறைவேற்றப்படாத காரணத்தினால், அச்சட்டம் எதுவித அர்த்தமுமின்றி வெறும் சட்டமாக இருந்து வந்தது.

1965ம் ஆண்டு டட்லி சேனநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்படும்வரை, இந்த தமிழ்மொழிச் சட்டத்துக்கு உயிரூட்டும் பிரமாணங்கள் எதுவும் கொண்டு வரப்படவில்லை. இந்தஒப்பந்தப்படி, அப்போது இருந்த அரசாங்கம் 1966ம் ஆண்டு தமிழ் மொழி விசேட பிரதிகள் சட்டத்துக்கு கொஞ்சமாவது உயிரூட்டக்கூடியசில பிரமாணங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. உடனடியாகஅதற்குஎதிராக சிலர்கிளர்ந்தெழுந்ததுடன், ஊர்வலம் நடத்தி விகாரமகாதேவி கிலமுன்னர் சத்தியப் பிரமாணம் எடுத்ததுடன், ஒரு புத்தபிக்கு துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானதுடன் ஊர்வலம் முடிவுற்றது,

1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு நிலைமையை இன்னும் மோசமாக்கியது. அரசியலமைப்பு சட்டப்படி சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரே உத்தியோக மொழியாக்கப்பட்டது. சிறுபான்மைஇனத்தின் மொழிக்கு அங்கீகாரம்அளிக்கப்படவில்லை, 1948ம் ஆண்டு அரசியலமைப்பில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக இடம் பெற்றிருந்த 29 வது ஷரத்து முற்றாக நிராகரிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி நிர்வாக ரீதியாக கல்வித்துறையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மொழிவாரி, மாவட்டவாரி தரப்படுத்தல்கள் இடம்பெற்றன இவை சமூக அமைதிக்கு பெரும்பாதகமாக அமைந்திருந்தன. இவை காரணமாக இந்நாட்டில் வாழும் இரு பெரும் தேசிய இனங்களுக்கிடையே இடைவெளி அதிகப்பட்டு வந்திருக்கிறது. சிலர் உயர்நிலையினர், சிலர் தாழ்ந்தநிலையினர் என்ற எண்ணம் வேரோடிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கார்னிவலில் சில பொலிசார் அத்துமீறிநடந்ததுதான் ஆகஸ்ட் சம்பவங்களுக்கான மூல காரணம் அல்ல—வேறு பல காரணங்கள் இருக்கின்றன.''

இவ்வாறு சட்டத்தரணி கே. என். சொக்ஸி தமது முன்னுரையில் குறிப்பிட்டார். அவரைத் தொடர்ந்து திரு. சாம். கதிர்காமர் கியூ. சி தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகத்தின் சார்பில்தனது உரையை ஆரம்பித்தார்.

பாவியுங்கள்



றோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றும் மோர் தயாரிப்பு

றோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றோயல் பேக்கிங்பவுடர்
றோயல் கஸ்டட் பவுடர்
றோயல் கோண் பிளவர்
றோயல் பிஸ் மக்ஸ்
றோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்


சிவா இன்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்கள் இன்னமும் பொறுமையை கடைப்பிடிக்கவேண்டுமா?

சிறிலங்கா என்னும் இலங்கை நாட்டில், 1977 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற சிங்கள வெறியாட்டம் பல தமிழர்களின் உயிரைக் குடித்துள்ளது. பல ஆயிரம் தமிழர்களை வீடுவாசல் இல்லாமல் தெருவில் நிற்கவும் பண்ணியுள்ளது. இந்தக் கொடுமைகளை அறிந்த இந்தியத் தமிழர்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்று துடிப்பதும், 'இப்படியோ அட்டூழியம் நடப்பது' என்று கொதிப்பதும் இயல்பு, ஆனாலும்,—சிறிலங்கா மிக அண்மையில் இருந்தாலும், அங்கே இழப்புகளுக்கு ஆளானோர் தமிழர்களாகவே இருந்தாலும்,—அது வேறொரு நாடு என்ற முத்திரையைப் பெற்றுள்ளது; அதன் உள் நாட்டு விவகாரங்களில் வேறு நாட்டார் தலையிடக் கூடாது என்ற நியதியும் இருக்கிறது.



இந்த ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு, இங்குள்ள அரசியலாளரும்பத்திரிகையாளர்களும்பொறுமை உபதேசம் செய்கிறார்கள்; இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவில் விரிசல் ஏற்பட்டு விடாதபடி நடந்துகொள்ள வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். இதற்கு அனுசரணையாக, 'ஈழநாட்டுத் தமிழர்கள் தனிநாடு கோருவது அவ்வளவு சரியல்ல" என்றும் "இந்த சிங்கள அட்டூழியங்களால் ஏற்பட்டுள்ள வேதனையைத் தணிக்க அந்த நாட்டு முதல்வர் (ஜெயவர்த்தன) உறுதி பூண்டிருப்பதை ஏற்று (அங்குள்ள தமிழர்கள்) ஒத்துழைக்க வேண்டும் என்றும் விரிய விரிய எழுதி வருகின்றார்கள்.

## புரியாத விளக்கம்

இவைகளைப் படிக்கின்ற இந்தியத் தமிழர்களும் பிறரும்,—"இலங்கைத் தமிழர்கள் தான் சிங்களரை வெறுத்துத் தனிநாடு கோருகிறார்கள் போலும்" என்று நினைக்க வாய்ப்புஇருக்கிறது; "அங்கே நடந்து வரும் அட்டூழியங்களுக்கு, அந்த நாட்டின் ஐந்தில் ஒரு பகுதியினராக உள்ள தமிழர்கள் தனிநாடு கோருவதே காரணமாக இருக்குமோ?" என்கிற சந்தேகத்தையும், இவர்களின் விளக்கம். மக்களிடையே எழுப்புகிறது.

இலங்கை நாட்டின் வரலாற்றையும் அரசியலையும் அறியாதவர்களால் உண்டாக்கப்படுகிற இதுபோன்ற தவறான எண்ணங்களை நீக்கி நிலைமையை (இங்குள்ளவர்களுக்குத்) தெளிவுபடுத்த வேண்டியது மிகமிக அவசியமாகிறது.

## பழைய வரலாறு

இலங்கை நாட்டில் இன்று பெருநக் கொண்டுள்ள சிங்களர், தமிழர் பிரச்சினை இன்று நேற்று தோன்றியது அல்ல; அதற்கு ஒரு நீண்ட (பல்லாயிரம் ஆண்டு) வரலாறு உள்ளது.

இன்று ஈழநாட்டிலே வாழ்கின்ற தமிழர்கள், — அங்கேயே தோன்றியவர்களாக இருந்தாலும் சென்றேறு குடிகளாக இருந்தாலும்,— கி. மு. ஐந்தாம் நாலாம் நூற்றாண்டுகளில் சிங்களவர்களின் முன்னோர் அங்கேகுடியேறுவதற்கு முன்பே இவர்கள் (தமிழர்கள்) அங்கே வாழ்ந்து வருகிறார்கள். சிங்களக் குடியேற்றத்தின் பிறகும், இலங்கையின் வடபகுதியைத் தமிழர்களும் தென்பகுதியைச் சிங்களவர்களுமே ஆண்டு வந்தார்கள். இந்த இரண்டு அரசுகளிடையேயும் போர்கள் அவ்வப்போது நிகழ்ந்தது உண்டு; ஒருவர் நாட்டை மற்றவர் கைப்பற்றியதும் உண்டு. என்றாலும், வடக்கே தமிழகம். தெற்கே சிங்களகம் என்னும் மரபு தொடர்ந்து நீடித்தே வந்துள்ளது.

மேலைநாட்டினர் இலங்கை நாட்டை அடிமைப்படுத்திய போது வட இலங்கையை (தமிழ் ஈழத்தை)த் தமிழ் மன்னர்களிடமிருந்தும், தென்னிலங்கையைச் சிங்களவரிடமிருந்துமே அவர்கள் கைப்பற்றினார்கள், இவை எல்லாம நாடறிந்த, உலகறிந்த. எல்லோரும் ஒப்புக் கொண்டுள்ள வரலாற்று உண்மைகள்.

## கசப்பின் வரலாறு

ஆங்கில ஆட்சியின் காலத்திலேதான் — சிங்களர் தமிழர் என்னும் இரண்டு இனங்களுக்குமிடையே கடுமையான வெறுப்புக்கு விதை ஊன்றப்பட்டது; அதுவரை அவரவர் நிலத்திலே ஆட்சி நடத்தி வாழ்ந்துவந்த இந்த இரண்டு இனத்தாரையும் ஒன்றாக முடிச்சுப்போட்டது ஆங்கில அரசு. ஆங்கிலேயருக்கே கைவந்த கலையாகிய பிரித்தாளும்சூழ்ச்சியும்முழுமையாகக் கையாளப்பட்டது.

தமிழர், சிங்களவர் என்னும் இரண்டு இனத்தாரும் தனது அடிமைகளே ஆயினும். — சிறுபான்மையினரான தமிழர்களைத் தன்பக்கம் சேர்த்துக் கொண்டது போலபாவலாக் காட்டியது ஆங்கில அரசு. வடஇலங்கை (ஈழத்தமிழகம்) இயல்பாகவே வறண்டபகுதி; அங்கே இருந்து வந்த சின்னஞ்சிறு தொழில்வாய்ப்புக்களுக்கும் ஊக்கமளிக்காமல், தமிழ் மக்களை அரசு பதவிகளுக்குள்ளே இழுத்தது ஆங்கில அரசாங்கம், உரிமையை இழந்துபோன தமிழ் மக்கள் உயிர்வாழ்வையும் இழந்து போகாமல்இருக்க—ஆங்கில அரசும் கிறிஸ்தவ பாதிரிகளும் அளித்த அடிமைமுறைக் கல்வியைப்பயின்று அரசாங்கத்திலே சென்று [illegible]கள். அரசாங்கமும் (திட்டமிட்டே) சிங்களவர்களைப் புறக்கணித்து. தமிழர்களை அரசு அலுவல்களிலே அரவணைத்தது.

இதன் காரணமாகவே, இலங்கைத் தீவில் தமிழர், சிங்களர் இனவெறுப்பு உருவாகி வளர்ந்தது; இதையே விரும்பி எதிர்பார்த்த ஆங்கில அரசு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தது. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் தானே?

## தவறிய தலைவர்கள்

இத்தகையதொரு வெறுப்புணர்வோடு வாழ்ந்த இலங்கை மக்கள் 1948ல் சுதந்திரம் பெற்றார்கள். சுதந்திரம்பெற்ற உடனேயே. தேசியத்தலைவர்கள்,—மாற்றான் விதைத்தநஞ்சை அகற்றியிருக்க வேண்டும். குறிப்பாக, பெரும்பான்மை (சிங்கள)ச் சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்கள் மிக நாகரிகமான முறையிலே இதைச் செய்து,—தமிழரும் சிங்களரும் இணைந்துவாழவழிசெய்திருக்க வேண்டும்; அல்லது முன்புபோல, 'வடக்கே உங்கள் ஆட்சி,— தெற்கே எங்கள் ஆட்சி; — இலங்கைத் தீவகத்திலே நாம் இரண்டு ஆட்சிகளும் இணைந்த கூட்டாட்சி" என்று திட்டம் வகுத்திருக்க வேண்டும்.

அந்நியர் சுரண்டலுக்கு ஆட்பட்டு வெறும் கலமாக்கப்பட்ட நாட்டை ஏற்றுக் கொண்ட தேசியத் தலைவர்கள் இதைச் செய்யத் தவறிவிட்டார்கள். மக்களின்

**முனைவர் சாலை இளந்திரையன்**

வயிற்றுப் பிரச்சினையையும் வாழ்வுப் பிரச்சினையையும் தீர்ப்பதற்கு திட்டம் தீட்ட முடியாத தலைவர்கள்,—மக்களைத் திசை திருப்புவதற்காக,—ஆங்கில ஆட்சியில் முளைத்து இலைவிட்டிருந்த இனவெறிக்குநீர்வார்த்தார்கள்.

## சிங்களர் வளர்த்த வெறி

சுதந்திர இலங்கையின் ஆட்சிவரலாறு இந்த உண்மையைத் தெள்ளத் தெளிவாகஉணர்த்துகிறது; இலங்கையில் இதுவரைநடைபெற்றுள்ள ஒவ்வொரு தேர்தலிலும். ஆளும் கட்சி தோற்கடிக்கப்பட்டு, எதிர்க்கட்சியே அடுத்துப் பதவிக்கு வந்துள்ளது. சேனநாயக்கா. கொத்தலாவலை, பண்டாரநாயக்கா, ஜெயவர்த்தன, சிறிமாவோ பண்டாரநாயக்கா என்று இத்தனை பேரின் ஆட்சி அங்கே மாறி மாறி வந்துள்ளது. இத்தனை பேரில் எவர் ஒருவராலும் இந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவில்லை என்கிற உண்மையை எல்லோரும் நெஞ்சிலே இருத்த வேண்டும்.

ஏற்கனவே ஆங்கிலேயர் உருவாக்கி வைத்த தமிழ் வெறுப்பு உணர்ச்சியின் காரணமாக, இலங்கைச்சுதந்திர ஆட்சி வந்ததும், அங்குள்ள தமிழ் மக்களின் மொழி உரிமை மறுக்கப்பட்டது; படிப்பு உரிமை கட்டுப்படுத்தப்பட்டது; அவர்களின் பண்பாட்டு நெறி அமுக்கப்பட்டு—அவர்களின் வாழ்வே குறுக்கி முடக்கப்பட்டது. இந்த அபாயத்தைத் தடுத்துத் தங்களுக்கு (சிறுபான்மையினர் என்ற முறையில்) இருந்து வரவேண்டிய உரிமைகளைக் கோரவே தமிழர்கள் ஒன்றுபட்டார்கள்.

கவனிக்க வேண்டும்; மிக அண்மைக்காலம் வரையிலே, தமிழர்களிடையே (தமிழ்க் காங்கிரஸ், அல்லது தமிழரசுக் கட்சியில்) தமிழர்களுக்குத் தனிநாடு கோரும் திட்டமே இருந்ததில்லை.

ஒவ்வோர் ஆட்சி வரும்போதும், தமிழர்கள் தங்கள் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டி அவைகளை மீட்டுத்தரவேண்டும் என்று கோருவார்கள். அரசும், "ஆகா, அப்படியே செய்வோம்" என்று சொல்லும்; எதிர்க்கட்சிகளைச்சமாளிக்க வேண்டிய சமயங்களில், தமிழரசுக் கட்சியோடு சேர்ந்து அந்த அரசுகள் கூட்டணி ஆட்சி அமைத்ததும் உண்டு,

சிங்களவர்களிலேயே மிக நாகரிகமான மனிதர் என்று கருதப்படுபவர் திரு.எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயகா அவர்கள். அவருடைய ஆட்சியின்போது,தமிழர்களின் தமிழரசுக் கட்சியோடு, தமிழர் உரிமைகள் பற்றி ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், அவருடைய கட்சியின் உள்ளேயும் வெளியேயும் இருந்த சிங்களவெறியர்களின் வெறியாட்டத்துக்குப் பயந்து அவரே அந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டியதாயிற்று.

1972ல் இலங்கை நாடு, தனது புதிய அரசியல் சட்டத்தை வகுத்தது. ஏற்கனவே தமிழர்களுக்குஇருந்து வந்த கொஞ்சநஞ்ச உரிமையையும் அது பறித்துவிட்டது; பச்சையாகச் சொன்னால்,- இந்தஅரசியல்சட்டம் இலங்கைத் தமிழர்களின் எல்லா உரிமைகளையும் பறித்து, அவர்களை அப்பட்டமான இரண்டாந்தரக்குடிகளாக்கி நிறுத்திவிட்டது-

இப்போதுஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளவரும் தமிழர்பிரச்சினையைத்தீர்த்துவிடப் போவதாக மார்தட்டுகிறவருமான திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைப் பற்றியும் ஒருவார்த்தை:- வேறு கட்சியின் அரசுகள் தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளிலே சிலவற்றையாவது திருப்பிக் கொடுக்கலாம் என்று ஆலோசித்தபோதெல்லாம்,-" அப்படிக் கொடுத்தால் நாட்டையே இரத்தக்களரி ஆக்குவேன்." என்று கொக்கரித்தவர்இந்த ஜெயவர்த்தனர்; ஏன், தமிழர் உரிமைக்கு எதிராக, கொழும்பிலிருந்துகண்டியை நோக்கித் தமிழ்வெறுப்புப் பாதயாத்திரை ஒன்றைமேற்கொண்ட "சிங்களப்பெருமையும்" ஜெயவர்தனருக்கே தனிஉரிமை,

## நமக்குப் புரியவில்லை!

இந்தப் பின்னணிகளோடேயே இலங்கைத் தமிழர் பிரச்சினையை அணுகவேண்டும்; தமிழர்கள் உரிமை கோரி அமைதியான போராட்டங்களில் ஈடுபட்டபோதும், (இதோ, இப்போது நடந்திருப்பதுபோல) அப்படி எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடாதபோதும், அவர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டு வந்துள்ள சிங்கள வெறித்தனத்தையும் அதன் விளைவான உயிர்ச்சேதத்தையும் அதனோடு சேர்த்துப் பார்க்கவேண்டும், அப்போதுதான், தமிழர்களைத் தனிநாடு கோரவேண்டிய எல்லைக்குத் தள்ளியவர்கள் யார் என்பது விளங்கும், அப்போதுதான்—"தமிழர்கள் இன்னமும் பொறுமையோடு (யாரையோநம்பி எதிர்பார்த்துக்) காத்திருக்க வேண்டும்" என்று உபதேசம் செய்வது எவ்வளவு தவறு என்பது தெளிவாகும்.

உண்மையில், ஈழநாட்டுத் தமிழர்கள் அளவுக்கு அதிகமான பொறுமைகாட்டிவிட்டார்கள்; அது, அவர்களின் ஏலாமையாக மட்டுமல்ல,- உலகெங்கும்உள்ளமனிதாபிமானிகளின் கையாலாகாத்தனம் என்றும் சிங்களவெறியர்கள் நினைத்துவிடும் அளவுக்கு, உலகம் இந்தப் பிரச்சினையை நீள விட்டுவிட்டது. தன் கண்ணெதிரே நடந்து வந்திருக்கிற இத்தனை வெறிவிளையாட்டுகளையும் பார்த்துக் கொண்டு, உலகம் இன்னமும் பொறுமை உபதேசம் செய்து கொண்டு இருக்கிறது என்றால்,- அதுஅறியாமையின் விளைவா அல்லது வெறும் போலித்தனத்தின் விளைவா? தெரியவில்லை,- நமக்கு உலகின் நிலை என்ன என்றே தெரியவில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறீலங்கா..!

—1-ம் பக்கத் தொடர்

யில் பண்டா—செல்வா ஒப்பந்தம் மீண்டும் வந்தால் அதை எதிர்த்து யாத்திரை மேற்கொள்வேன் என்று கூறியவரும் இவரே; பிரதமராகவந்தபின்னர், 1977 இனக்கலவர நேரத்தில் தமிழினத்தலைவர் அமிர்தலிங்கத்தைப்பார்த்து 'போரா சமாதானமா?' என்றுகேள்வியெழுப்பியவரும் இவரே; 6-12-77ல் தேசிய பேரவையில், சிங்களம்மட்டும் சட்டம் மாற்றப்பட மாட்டாது என்றும், தமிழ் மக்களுக்கு மரபுவழித்தாயகம் என்று ஒன்று கிடையாதென்றும், டி. எஸ். சேனநாயகாவின் (சிங்கள) குடியேற்ற கொள்கை கைவிடப்பட மாட்டாது என்றும் அறிவித்தவரும் இவரே; இப்போது மும்மொழித்திட்டம் என்ற போர்வையில் இத்தகைய 'மாபெரும் காரியங்களை' தமிழினத்துக்கு எதிராக சாதித்த பெரியவர் இலங்கையின் சர்வாதிகாரியாவதை நாம் எப்படி வரவேற்று மகிழ்ந்திடமுடியும்? எம்மை பொறுத்தவரை—பாஸிஸம் என்றால் அது ஜே. ஆர். என்றே கருதுகிறோம்.''

இவ்வாறு அவர்கள் வெளிநாட்டாரிடம் விளக்கமளித்தனர்.

லண்டனிலுள்ள ஐக்கிய தேசியக்கட்சிக்கிளையின் பொருளாளராக இருக்கும் தமிழர் ஒருவர் ஆர்ப்பாட்ட வீரர்களைப்பார்த்துப் பின்வருமாறு கூறினாராம்:— ''என்ன வெட்கம் இல்லையா? எப்பொழுதும் எதற்குப்பார்த்தாலும் ஆர்ப்பாட்டமா? இப்படிசெய்தால் அரசாங்கம் எப்படி உங்களுக்கு வேலைதரும்? எங்களுடன் வந்துசேருங்கள்; உங்களுக்கு வேலை பெற்றுத்தருகிறோம்'' என்றாராம்.

இதனால் சினங்கொண்ட ஆர்ப்பாட்டவீரர்கள் அந்தச் சிங்களதாசரிடம், ''நீ வேண்டுமானால் உத்தியோகத்துக்காகப் பந்தம்பிடி; அவர்கள்தருகிற 'கிரிபத்'தை சாப்பிடு ஜே. ஆரின் காலைக் கழுவிக் கும்பிடு'' என்று சூடாகத் திருப்பிக்கொடுத்தனர்.

லண்டனில் நடைபெற்று வரும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள், இலங்கை அரசுக்கு பெரிய தலையிடியை கொடுத்துள்ளது. ''இலங்கையில் விடுதலை வீரர்கள் பற்றிக் கவலைப்படத்தேவையில்லை; அவர்களை எமது படைபலத்தைக் கொண்டு அடக்கிவிடலாம்; ஆனால் லண்டனில் இயங்கும் ஈழவிடுதலை வீரர்கள் பற்றித்தான் அரசாங்கம் கவலைகொண்டுள்ளது. இவர்கள் வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் செய்யும் பிரசாரத்தினால், வெளிநாட்டார் லண்டனிலுள்ள இலங்கைத் தூதர் உட்பட அரசாங்க அதிகாரிகளிடம் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுக்குடைகின்றனர். அவர்களுக்குப் பதில் அளித்திடமுடியவில்லை.''

மேற்கண்ட கருத்துப்பட தூதரக அதிகாரி ஒருவர் மற்றொருவரிடம் கூறி மனம் வருந்தினாராம்.

(நமது லண்டன் நிருபர் க. இளங்கோ)

## நூல் வெளியீட்டு விழா

காசிவாசி செந்திநாதையர் நூல் வெளியீட்டு விழா 18-2-78 சனிக்கிழமை மாலை குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாசாலையில் நடைபெறுகிறது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் நூலை வெளியிட்டுவைக்க வி. தருமலிங்கம் பா. உ. தா. திருநாவுக்கரசு பா. உ. ஆகியோருட்பட பலர் உரையாற்றுகிறார்கள். பண்டிதை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை நிகழ்த்துகிறார்.

## சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50.00
அரை ஆண்டு ,, ரூ. 25,00

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

''சுதந்திரன்''
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

7-ம் வாரம்



கணேஷ் பிலிம்ஸார் அளிக்கும்

கணேஷ் பிலிம்ஸ்

**நான் உங்கள் தோழன்**

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை] 9-வது வாரம்

முத்துராமன், ஸ்ரீகாந்த், வி. கே. ராமசாமி
தேங்காய் சீனிவாசன், ஜெயசித்ரா
எஸ். வி. ராமதாஸ், குமாரி பத்மினி
சுருளிராஜன், எம். பானுமதி
மாஸ்டர் குமார், ஜெயவாணி
ஐ. எஸ். ஆர். கண்ணையா, ஹலம்

— நடித்த —

**இன்ஸ்பெக்டர் மனைவி**

(இப்பொழுது காண்பிக்கப்படுகிறது)

**றீகல்** (மட்டுநகர்)

**மூன்று முடிச்சு**

**கிங்ஸ்லி** (கொழும்பு) 14-வது வாரம்

கமலஹாசன், ரஜனிகாந்த்,
ஸ்ரீதேவி, விஜயா நடித்த
கே. பாலச்சந்தரின்

**மூன்று முடிச்சு**

**வெலிங்டன்** (யாழ்நகர்)

எம்ஜி ஆர் நடித்த— **கணவன்**

(புதிய கொப்பி)

**கெப்பிட்டல்** (கொழும்பு) 3வது வாரம்-

கே. ஆர். விஜயா — ஜெய்சங்கர் நடித்த-

**மேயர் மீனாட்சி**

**பிளாசா** (கொழும்பு) **லிடோ** (யாழ்நகர்)

முத்துராமன், சுஜாதா, சிவகுமார்
பத்மபிரியா -நடித்த

**உறவு சொல்ல ஒருவன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு பெப்ரவரி 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்